**நவம்பர் - 20**

**"இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை." - 2பேது 1.10.**

நமது மீறுதல்களை மூடவும் நம்முடைய அன்றாட தவறுகளுக்காக ஈடு செய்ய கிடைக்கிற கிறிஸ்துவின் நீதியை கருதாமலும், இந்தக் காரியங்களைப் பூரணமாக செய்கிறதினாலும் கிடைக்கிற பலன், "ஒருக்காலும் இடறி விழுவதில்லை." என்பது அல்ல, ஆனால் சாட்டப்பட்ட கிறிஸ்துவின் நீதியிலுள்ள நமது விசுவாசத்தோடுசேர்ந்து, இந்தக் குணசீலங்களை எல்லாம் நமது திறமைக்குத் தக்கதாக நாம் பயின்றிருந்தால் நாம் இடறி விழமாட்டோம். நம்முடைய சொந்த நீதியில் நம்பிக்கை வைக்கத் துணிவு கொள்ளாமல், ஆனால் கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தின் பலனாய் நம்முடையதாயிருக்கிற அந்தப் போதுமான நீதியின் வஸ்திரத்தில் நம்பிக்கை வைத்து, நம்மால் கூடுமான எல்லாவற்றையும் நாம் செய்திருக்கும்பொழுது இன்னும் பிரயோஜனமற்ற ஊழியக்காரராகவே இருக்கிறோம். அப்பொழுது பாவத்தை விட்டுவிடவும், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை" என்பதிலுள்ள அந்த பரிசுத்தத்தை அனுசரிக்கவும், ஆசிக்கிற அப்படிப்பட்டவர்களுக்கு, மாத்திரமே கிறிஸ்துவின் நீதிஉபயோகப்படுகிறது என்பதை அறிந்து, உறுதியான சிரத்தையோடு அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுகிறோம். **- Z ’97, 148 (R 2154)**

இவைகளை செய்தல் மூன்று வேறுபட்ட செயல்களைக் குறிக்கிறது. முதலாவது சேர்த்தல், அதாவது மேலே சொல்லப்பட்டிருக்கிற குணசீலங்களை அபிவிருத்தி செய்தல். இரண்டாவது, இவைகளை உங்களில் உண்டாயிருத்தல் அதாவது இந்த குணசீலங்களை விருத்தி செய்யப்பட்ட பிறகு அவைகளை அப்பியாசிப்பது. மூன்றாவது பெருகுதல் அதாவது இந்த குணசீலங்கள் ஒன்றோடொன்று சரியாக செயல்பட்டு அப்படிப்பட்ட செயலில் நம்முடைய குணசீலங்களையும், நமது பற்றுதல்களையும், எண்ணங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தக் குணசீலங்களை உபயோகிப்பது. இந்த மூன்று செயல்களும் உண்மையாகவே நிறைவேற்றப்படும் பொழுது கிறிஸ்துவைப் போலொத்த குணத்தின் பூரணத்தை விருத்தியாக்குகின்றன. இந்த மூன்று விதமான குணத்தின் செயல்களின் மூலமாகவும், குணவிருத்தியின் மூலமாகவும், தேவனுடைய விசேஷித்த தயவிலிருந்து விழுந்து விடாமல், ஒருவன் காக்கப்பட்டு முடிவாக நமது கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் மூலமாக முற்றிலும் ஜெயம் கொண்டவனாக வெளிப்பட சாத்தியமாக்கப்படுகிறான். குண அபிவிருத்திக்கென்று கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாப் போதனைகளிலும், மிகவும் முக்கியமான இதை மிகவும் உண்மையுடன் உபயோகிப்போமாக.

**-P ’30, 183.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யாத் 19:5; 2பேது 3:18; யூதா 24; மல் 3:2; மத் 10:22; மாற் 13:13; 1கொரி 15:2,58; கலா 6:9; 2தீமோ 2:11; வெளி 2:10; 16:15; யாக் 1:22-25; சங் 24:3,4.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 133 (R 5677).**

**வினாக்கள் : நான் இந்த வாரத்தில் "இந்த காரியங்களை" எவ்வாறு செய்து வந்தேன்? ஏன்? எவ்வாறு? பலன்கள் எவை?**